# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**

**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


நாள்: **03.05.2016**

பெறுநர்

**தலைமைப்பொறியாளர்/ பணியமைப்பு,**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் விநியோக கழகம்,

144, அண்ணாசாலை,

சென்னை 600 002.

ஐயா,

**பொருள் : பணியமைப்பு - நிர்வாகம் - அனல், புனல் - எரிவாயூ சுழலி போன்ற மின் விநியோக வட்டங்களில் பணியாற்றும் மின்வாரிய குடியிருப்பில் வசித்துவரும் ஊழியர்களுக்கு, குளிர்சாதன (ஏ.சி) பயன்பாட்டிற்கு மாதம் ரூபாய் 500/- செலுத்த வேண்டும் என்பதை ரத்து செய்ய கோருதல் சம்மந்தமாக**

**பார்வை** : . Letter No. CE/CD/ SE/CDSHP/E1/A2/F Cost Cut measures / D163 /16, Dated 26.02.2016

தமிழக மின் வாரியத்தில் உள்ள அனல், புனல், எரிவாயூ சுழலி மின் விநியோக வட்டங்களில் பணியாற்றும் வாரிய குடியிருப்பை பயன்படுத்தும் ஊழியர்களிடமிருந்து குளிர் சாதன பயன் பாட்டிற்காக ரூ.500/- பிடித்தம் செய்ய வேண்டும் என்ற உத்தரவை திரும்ப பெறக் கோருதல் சம்மந்தமாக எங்களது கருத்துக்களையும் உடனடி நடவடிக்கையும் எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக மின் வாரியத்தின் செயல்பாட்டிற்கு பின் புலமாக அனல்,புனல், எரிவாயூ, சுழலி , மின் விநியோக வட்டங்கள் துணை மின் நிலையங்கள் உள்ளன. இவைகளை உணர்ந்துத்தான் மேற்கூறிய பிரிவுகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதிகளும், அந்த குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், இலவச மின்சாரம் போன்ற சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென தொழிற்சங்கங்கள் கோரிக்கை எழுப்ப அதை ஏற்று வாரியமும் பல்லாண்டுகளாக அந்த சலுகை அளித்து வருகிறது.

உற்பத்தி வட்டங்களிலும், மின் விநியோக வட்டம், துணை மின் நிலையங்களில் பணியாற்றுபவர்கள் ஷிப்ட் முறையிலும் பல்வேறு சீதோஷ்ண மாற்றங்களுக்கு இடையே பணியாற்றுகின்ற காரணத்தினால் தான் இலவச மின்சாரம, குடிநீர், போன்றவைகள் வழங்கப்படுகிறது. மேற்கூறிய பிரிவுகளில் பணியாற்றும் வாரிய குடியிப்பில் தங்கி இருப்பவர்களுக்கு இலவச மின்சாரம் என்று வழங்கி விட்டு அதில் குளிர்சாதனம் (ஏ.சி) பயன்பாட்டிற்கென மாதம் ரூபாய் 500/- ஐ கட்ட வேண்டும் என்று உத்தரரவு பிறப்பித்தது சரியல்ல என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து மேற்கூறிய உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

எனவே தலைமை பொறியாளர் / பணியமைப்பு அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து அனல், புனல் எரிவாயூ மின் விநியோக வட்டங்களில் வாரிய குடியிருப்பில் தங்கி பணியாற்றும் ஊழியர்களிடமிருந்து குளிர்சாதன (ஏ.சி) பயன்பாட்டிற்காக மாதம் ரூ.500/- செலுத்திட வேண்டும் என்ற உத்தரவை ரத்து செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தங்களின் நம்பிக்கையுள்ள

**(எஸ்.எஸ்.சுப்பிரமணியன்)**

பொதுச் செயலாளர்

நகல்: கன்வீனர்கள்

அனல், புனல் ஆலோசனை வட்டக்குழுக்கள்